Registered as a Newspaper in Sri Lanka

# ஈழமுரசு

முரசு 2 26-2-1985 செவ்வாய்க்கிழமை (மாசி 15 - ஜ ஆகிர் 5) முழக்கம் 22

## கோப்பாய் கைதடிப் பாலம் மீண்டும் குண்டினால் தகர்ப்பு

திருத்தப்பட்டு வாகனங்கள் செல்லக்கூடியதாகவிருந்த கோப்பாய் கைதடி வீதிப் பிரதான பாலம் நேற்று மீண்டும் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது ஒரு மாத காலத்துக்கு முன்னர் குண்டினால் தகர்க்கப்பட்ட இப்பாலம், சிலவாரங்களுக்கு முன்னர் இளைஞர்களால செப்பனிடப்பட்டு, போக்குவரத்துக்கு உகந்ததாக மாற்றப்பட்டது நாவற்குழி 'சோதனையை' தவிர்ப்பதற்காக பலரும் இப்பாதையையே பயன்படுத்தி வந்தனர். நேற்று பிற்பகல் சுமார் இரண்டு மணியளவில் கைதடிப் பகுதியிலிருந்து நான்கு 'வாகனங்களில்' வந்தவர்களால் இப்பாலம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதாம்.

# தமிழகம் வந்துள்ள அகதிகளுக்கு உதவுமாறு ஐ. நா. அகதிகள் கமிஷனிடம் அமிர் வேண்டுதல்

(சென்னை)

இலங்கையிலிருந்து தமிழகம் வந்துள்ள சகல அகதிகளுக்கும் உடனடியாக உதவி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஐ. நா. அகதிகள் கமிஷனிடம் தமிழர் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1983 ஜூலை இனக்கலவரத்திலிருந்து இன்று வரை தமிழகம் வந்துள்ள சுமார் எண்பதாயிரம் அகதிகளுக்கும் உதவி வழங்கப்பட வேண்டும் என்று திரு அமிர்தலிங்கம் தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார். புதுடில்லியிலுள்ள மேற்படி கமிஷனுக்கு தந்தி மூலம் இவ்வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

இதற்கிடையே, இம்மாதம் 4ம் திகதியிலிருந்து நேற்று வரை ராமேஸ்வரம் வந்துள்ள வடபகுதி தமிழ் அகதிகளின் தொகை 9155 ஆக அதிகரித்துள்ளதாக நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

இவர்களில் பலர் திருச்சி, புதுக்கோட்டை, வட ஆற்காடு ஆகிய பகுதிகளில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு நிதி உதவியும் மானிய விலையில் உணவுப்பொருட்களும் வழங்கப்படுகின்றன.

# ராஜீவின் 'முக்கிய' செய்தி பற்றி உயர்மட்ட ரகஸிய ஆராய்வு!

## தூதுவர் திலகரத்ன கொழும்பு திரும்பியதை அடுத்து, சில திருப்பங்கள் ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள இலங்கையின் தூதுவர் திரு. எஸ். பெர்னுட் திலகரத்தின நேற்று முன்தினம் கொழும்பு திரும்பியதை அடுத்து அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்கள் மத்தியில் தொடர்ச்சியான பல சந்திப்புகள் நடைபெற்றதாகவும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்த முக்கியமான செய்தி தொடர்பாக ரகஸியமான ஆய்வுகள் நேற்றிரவு நடைபெற்றதாகவும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. இன்றும் சந்திப்புகள் தொடரவுள்ளன.

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியிடம் பாரதப் பிரதமர் தெரிவித்த சில முக்கியமான கருத்துக்களுடன் தொடர்புபட்டதான செய்தியையே தூதுவர் திலகரத்தின கொண்டு வந்ததாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவதாகத் தகவல்கள் கிடைத்து வருவதால் இலங்கை அரசுக்கு இந்தியாவால் எந்த உதவியும் வழங்க முடியாதென்று பாரதப் பிரதமர் ஏற்கனவே அமைச்சர் லலித்திடம் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

அதேவேளையில், இலங்கை அகதிகள் தினமும் தமிழ் நாட்டுக்குள் வருவதால், தென்னிந்தியாவில் நெருக்கடி அதிகரிக்குமானால் பாரத அரசின் கட்டுப்பாட்டை அது மீறிச் செல்லும் நிலை ஏற்படலாமென்றும் இலங்கையின் கவனத்துக்கு இந்திய அரசு கொண்டு வந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இந்நிலைமை உருவாகு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு பாரதம் கேட்டிருப்பது பற்றியே நேற்று முக்கியமாக ஆராயப்பட்டதாம்.

### ஒன்றுபடக் கோரிக்கை

(சென்னை)

இலங்கை இனப் பிரச்சினையின் முன் நடவடிக்கையாக போராளிகள் இயக்கங்கள் ஒன்றுபடவேண்டும் என்று பாரதத்தின் சமூக பிரபலாஸ்தரான திரு. குமாரமங்கலம் கூறியுள்ளார்.

### 'புலி'கள் உரிமை கோரியுள்ளன!

## இப்போது சி. ஐ. டி. விசாரணையில் பிரான்சிலிருந்து திரும்பிய இரண்டு தமிழ் இளைஞர்கள்

பிரான்ஸ் நாட்டுக்கு விஸா இல்லாமல் சென்றபோது அகப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் இரு இளைஞர்கள் தற்போது கொழும்பில் ரகஸிய பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

ஈ. எம். விஜேந்திரன் எஸ். சத்தியகுமார் ஆகிய இருவருமே கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கியபோது கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களாவர்.

பெர்லின் ஊடாகத் திருப்பி அனுப்பப்பட்ட இவ் இளைஞர்களுக்கும் தீவிரவாத இளைஞர் இயக்கங்களுக்கும் தொடர்பு இருக்கிறதா என்பதைக் கண்டறிவதே சி. ஐ. டி. யினரின் விசாரணையின் முக்கிய நோக்கமென்று கூறப்படுகின்றது.

## குருநகர் வங்கிக் கிளைகள் நேற்று திறக்கப்படவில்லை!

குருநகரிலுள்ள எந்தவொரு வங்கியும் நேற்று திறக்கப்படவில்லை. உடனடியாக இவைகளைத் திறப்பதற்கான சாத்தியக் கூறும் இல்லையென வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமை இலங்கை வங்கிக் கிளைக் கொள்ளையை அடுத்து ஏற்பட்ட அச்சமும்? பாதுகாப்பின்மையுமே இதற்குக் காரணமென்றும் கூறப்படுகின்றது.

நேற்று பென்ஷன் பெறுவதற்காக இங்கு வந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இன்றும் நாளையும் இங்கு கொடுபடவிருந்த பன்னிர

—6ஆம் பக்கம் பார்க்க

## குறிப்பிட்ட கடல் பகுதியில் மீன்பிடிக்க அனுமதி!

வடபகுதிக் கடல் கண்காணிப்பு வலயத்தில் குறிப்பிட்ட பகுதியில் விரைவில் மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படுவது பற்றி ஆராயப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகள் குழு ஒன்று வடபகு

—6ம் பக்கம் பார்க்க

### வங்கிக் கொள்ளை தொடர்பாக

## பாதுகாப்பு ஊழியர், சாரதி தொடர்ந்து விசாரணையில்!

குருநகர் இலங்கை வங்கிக் கொள்ளை தொடர்பாக மேற்படி வங்கியின் பிரதம பாதுகாப்பு அதிகாரியும், சம்பந்தப்பட்ட வாகனத்தின் சாரதியும் தொடர்ந்தும் ராணுவத்தினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

—6ம் பக்கம் பார்க்க

## ஞானச்சந்திரன் பூதவுடலுக்குப் பல்துறை பிரமுகர்கள் இறுதி அஞ்சலி

நேற்று முன்தினம் இரணைமடுவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரனின் இறுதிச் சடங்குகள் நேற்று மாலை சாவகச்சேரியிலுள்ள அன்னாரின் தந்தையின் இல்லத்தில் நடைபெற்றன

முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர்கள், அரச செயலக ஊழியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் உட்பட சமுகத்தின் பல்வேறு பிரிவைச் சேர்ந்தவர்களும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி முன்னாள் எம். பி. திரு வி. என். நவரத்தினம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு என் ஜெயநாதன் உட்பட யாழ்ப்பாண அரசாங்க செயலக சிரேஷ்ட அதிகாரிகள் பல

— 6-ம் பக்கம் பார்க்க

## பரீட்சையை ஒழுங்காக நடத்த அனைவரதும் ஒத்துழைப்பை பணிப்பாளர் கோருகிறார்

நாளை ஆரம்பமாகும் ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சை எவ்வித குழப்பமுமின்றி முறையாகப் பரீட்சை நடைபெறுவதற்கு அனைவரதும் ஒத்துழைப்பை வேண்டி யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1984ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சா/த) பரீட்சை எதிர்பாராத சில அசம்பாவிதங்களால் குழப்பப்பட்டதை எல்லோரும் அறிவீர்கள். பரீட்சையை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்த பல பரீட்சார்த்திகள் இதனால் பெரிதும் ஏமாற்றம் அடைந்ததுடன். சகல பரீட்சார்த்திகளும் தமது கல்வி ஒரு வருடத்தால் பின்

— 6-ஆம் பக்கம் பார்க்க

### இன்று முக்கிய கூட்டம்

நாளை ஆரம்பமாகவிருக்கும் ஜீ. சி. ஈ. பரீட்சைக்கு இணைப்பு அதிகாரிகளாகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டவர்கள் அனைவரையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறு யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

### தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கவனத்திற்கு

ஜீ. சி. ஈ. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் இதுவரை கிடைக்கப்பெற்றிருக்காத தனிப்பட்ட பரீட்சார்த்திகள், டிசம்பர் மாதப் பரீட்சையின் போது எந்தெந்தப் பரீட்சை மண்டபத்தில் எடுத்திருக்க வேண்டுமோ அந்தந்தப் பரீட்சை மண்டபங்களின் மேற்பார்வையாளர்களுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு கல்விப் பணிப்பாளரினால் கேட்கப்படுகின்றனர்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## புதிய அதிபர்

(உடுப்பிட்டி)

கலட்டி றே. க. த. க. வித்தியாலய அதிபர் திரு சி. வின்சென்ற் கரவெட்டி திரு. இருதயக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய திரு தோமஸ் சப்பன் ஓய்வுபெற்றதை யடுத்தே இந்நியமனம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியுரிந்த திரு. ஏ. ஜே. சேவியர் கலட்டி றே. க. வித்தியாலயத்தின் அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

வல்வை இந்து த. க. பாடசாலையின் கனிஷ்ட அதிபராகப் பணிபுரிந்த திரு. இ. கந்தசாமி கம்பர்மலை அ. த. க. பாடசாலை அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## விலை வீழ்ச்சி

(சரசாலை)

நெல் அறுவடையைத் தொடர்ந்து நெல்லின் விலை தற்போது முன்னைய விலையிலும் பார்க்க குறைந்து வருகிறது. இதனால் அரிசியின் விலையும் குறைந்துள்ளது.

## வீதியின் அவல நிலை

(மிருசுவில்)

மிருசுவில், கொடிகாமம் பகுதியினூடாகச் செல்லும் யாழ் – கண்டி வீதியில் பல இடங்களிலும் பாரிய குழிகளும் கற்களும் காணப்படுவதனால் இவ் வீதியால் பயணம் செய்யும் வாகனங்கள் மட்டுமன்றி பாதசாரிகளும் பல இன்னல்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது.


## தென்மராட்சியில் சீமெந்துக்கு தட்டுப்பாடு

(மிருசுவில்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மூடப்படவிருப்பதாக வெளிவந்த செய்திகளை அடுத்து தென்மராட்சிப்பகுதியில் தற்போது சீமெந்துக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில வியாபாரிகள் கள்ளச்சந்தையில் அதிக விலையில் விற்பனை செய்து வருகின்றனர். இதனால் கட்டட வேலைகளை ஆரம்பித்துள்ளோர் தங்கள் வேலைகளை இடைநடுவில் நிறுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

## பிறந்தநாள் வாழ்த்து



✲ பண்டத்தரிப்பு அழகரத்தினம் சரோஜினிதேவி தம்பதிகளின் மகன் சிவமோகன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ மானிப்பாய் ஜெயகுலராசா இராஜேஸ்வரி தம்பதிகளின் மகள் ஜெலின்ஸ் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ அல்வாய் மேற்கு சின்னத்தம்பி மகேந்திரா தம்பதிகளின் மகள் சத்தியப்பிரியா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ அரியாலை கந்தசாமி குகனேஸ்வரி தம்பதிகளின் மகன் குகதீபன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ அல்லாரை தெற்கு பிறைகுடி சரோஜா தம்பதிகளின் மகன் நவாஸ்கன் இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ குருநகர் பசிப்டி ஜெயபாலகிருஸ்ணன் தம்பதிகளின் மகன் ரமேஸ் இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ கைதடி வடக்கு ஆறுமுகம் தவமணிதேவி தம்பதிகளின் மகள் காந்திமதி இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## தெல்லிப்பளை பிரஜைகள் குழு

(ஏழாலை)

தெல்லிப்பளைப் பகுதிக்கான பிரஜைகள் குழுத் தலைவராகச் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவு செய்யப்பட்டுள்ளார். திருவாளர்கள் ம. சிவமகாராசா, கே. தணிகாசலம், சு. சபாநாயகம், கே. நல்லையா ஆகிய பிரமுகர்களுட்பட பல பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் மேலும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்பிரஜைகள் குழு முல்லைத்தீவு அகதிகட்கு 3000 ரூபாவும், மயிலிட்டி மீனவர் குடும்பங்களுக்கு 3000 ரூபாவும் நிதியுதவி வழங்கியுள்ளது. அத்துடன் முல்லைத்தீவு அகதிகளுக்கு உடைகள் சேகரித்தும் அனுப்பியுள்ளனர்.

## நீர் விநியோகம் தடையாகும்?

(சரசாலை)

சாவகச்சேரியில் நீர் விநியோகத்திட்டம் பாதிப் படையலாம் என்றும் இதில் கடமையாற்றும் தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை உருவாகலாம் என்றும் அஞ்சப் படுகிறதாம்.

இக் குழாய் நீர் விநியோகத்திட்ட அலுவலகத்தில் இடம் பெற்ற கொள்ளையின் எதிரொலியே இந்நிலை எனக் கூறப்படுகிறது.

## உசனில் இட நெருக்கடி

(மிருசுவில்)

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் தற்போது பலத்த இட நெருக்கடி நிலவுவதால் மாணவர்களும், ஆசிரியர்களும் பல வசதியீனங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் பலர் தற்போதைய சூழ்நிலையில் தங்கள் பாதுகாப்பைக் கருதி இப் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளதனாலேயே இத் திடீர் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

## காக்கைதீவு அபிவிருத்திசங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவு மாதிரிக் கிராம வீடமைப்பு அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் திருவாளர்கள் இ. சேனாதிராஜா, சி. நாகேஸ்வரன் ஏ. ஆனந்தராஜா, கே. பூரணச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

போஷகர் திரு ம. அம்பிகாபதி தலைவர் திரு. எம். வர்ணலிங்கம் உப – தலைவர் திரு. இ. இரத்தினசிங்கம், செயலாளர் செல்வி. ம. ரத்தினா, உப செயலாளர் திரு. செல்வி. வி. புவனேஸ்வரி. பொருளாளர் திரு. க. மகாலிங்கம் அறுவர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## இடமாற்றம்

(சரசாலை)

சாவகச்சேரி உதவியரசாங்க அதிபர் அலுவலகத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. தண்டாயுதபாணி புதுக்குடியிருப்பு உதவியரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். மன்னார் கச்சேரியில் லிகிதராக கடமையாற்றிய திரு. க. கேதீஸ்வரன் சாவகச்சேரி உதவியரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

கிறிஸ்தவ சங்க

## சிறப்பு மலர் வெளியீடு

(நல்லூர்)

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் தனது எழுபத்தைந்தாவது வருட நிறைவு விழாவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இந்தச் சிறப்பு மலரில் சங்கத் தலைவர் திரு. யே. சி. அரசரத்தினம், தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனப் பேராயர் பேரருட்திரு டி. யே. அம்பலவாணர் ஆண்டகை, மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு–கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் வணக்கத்துக்குரிய எச். ஆர். எஸ். ஜெயச்சந்திரன் அடிகளார் சங்கச் செயலாளர் அருட்திரு எஸ் என் சுகுணனந்தன் அடிகளார் ஆகியோர் சிறப்புக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

யாழ்ப்பாண பொது சன நூல் நிலையத்தின் வளர்ச்சிக்காக யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் எடுத்த நடவடிக்கைகள் குறித்து சிறப்புக் கட்டுரை ஒன்றும் இம் மலரில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இளைஞர் நன் முயற்சி

(வயாவிளான்)

அச்சுவேலி பகுதி வீதிகள் இளைஞர்களால் சீராக செப்பனிடப்பட்டுவருகின்றன.

## இருமாத சம்பளமில்லை?

(சரசாலை)

இலங்கை மின்சார சபையின் தமிழ் ஊழியர்கள் சிலருக்கு கடந்த இருமாத காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை முன்பும் இதனால் மேற்படி ஊழியர்களின் குடும்பங்கள் பெருங்கஷ்டத்தை எதிர்நோக்கி உள்ளதாகவும் தெரிய வருகிறது.

## அச்சுவேலியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

அச்சுவேலியில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட ஐம்பதுக்கும் அதிகமான குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பல பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

இப்பொருட்களை அச்சுவேலி பிரஜைகள் குழுத் தலைவர் திரு டீ. என். யோசப், செயலாளர் திரு. கே. என். கணபதிப்பிள்ளை ஆகியோர் வழங்கினர், அச்சுவேலி லயன்ஸ் கழகப் பொருளாளர் திரு கே கனகராசா சமாதான சபை உறுப்பினர் திரு. டீ. துரைசிங்கம் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

## நிர்வாகிகள்

(புத்தூர்)

புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலையத்தில் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாக தெரியப்பட்டனர்.

தலைவர்: கா. கதிர்காமநாதன் உப தலைவர் க. நா. செல்லக்கண்டு செயலாளர் எஸ். கே. சந்திர சேகரன் உப பொருளாளர் மு. மாணிக்கம் உப பொருளாளர் சி. கனகலிங்கம் பரிசோதகர் ப. குணரத்தினம் போஷகர் மா. கணபதிப்பிள்ளை மற்றும் ஆறு செயற் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டார்கள்.

## உணவுப் பயிர் உற்பத்தியில் உத்வேகம்

(ஏழாலை)

யாழ்ப்பாணக்குடாநாடெங்கும் சுவரொட்டிகள் மூலமும் கருத்தரங்குகள் மூலமும் இப்பொழுது உப–உணவுப் பயிர்ப் பிரசாரம் முன்வைக்கப்பட்டுள்ளது. இலட்சிய நோக்கில் திரண்டுள்ள தீவிரவாத இளைஞர்களே இப் பிரசாரத்தைத் தொடர்ந்து செய்து வருகிறார்களாம். பணப் பயிர்களான புகையிலை, வெங்காயம், மிளகாய் என்பனவற்றிலும் பார்க்க கூடுதலான அளவுக்கு குரக்கன், சாமை, தினை, மரவள்ளி, இராசவள்ளி, வத்தாளை உழுந்து, பயறு, முதலாய உணவுப் பயிர்களை உற்பத்தி செய்யுமாறு கமக்காரர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள். இக் கோரிக்கைக்கு அமைய வலி–வடக்குப் பகுதியெங்கும் மரவள்ளி பரவலாகச் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது.

## பகலிலும் மின்னொளி

(மிருசுவில்)

கச்சாய் உப–அலுவலக எல்லைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள தெருவிளக்குகளில் பல பகல் நேரத்திலும் அணைக்கப்படாமல் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கின்றன. இவற்றுக்குரிய பாகங்கள் பழுதடைந்துள்ளமையே இதற்குக் காரணம் எனத்தெரிவிக்கப் படுகிறது.

அதே சமயம் இப் பகுதியிலுள்ள பல தெருவிளக்குகளின் மின் குமிழ்கள் பழுதடைந்து பல மாதங்களாகியும் இது வரை புதிய மின் குமிழ்கள் பொருத்தப்படவில்லை. இதனால் இப்பகுதியின் பல முக்கிய வீதிகள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன.

## அவதி

(சரசாலை)

விஷமிகள் வயர்களை அறுத்துவிட்டதால் சாவகச்சேரிப் பகுதிமக்கள் தொலைபோசியில் தொடர்பு கொள்ளமுடியாமல் பெரிதும் அவதியுறுகின்றனர்.

## சமத்துவம்

(வயாவிளான்)

வயாவிளான் தெற்குப் பகுதி ஞானவைரவர் கோயில் ஒன்றில் இளைஞர் இயக்கம் ஒன்று மேற்கொண்ட முயற்சியை அடுத்து சமத்துவநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் பற்றுக்குறை நிவர்த்தி

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திற்கு மேலும் இரு ஆசிரியர்கள் அண்மையில் இடமாற்றம் பெற்று வந்துள்ளனர். இதனால் இப் பாடசாலையில் நிலவிய ஆசிரியர் பற்றுக்குறை ஓரளவு குறைந்துள்ளது.

## [illegible]

### விற்கவும் - வாங்கவும்

நிலங்கள் – [illegible] – புத்தகங்கள் – [illegible] – தீப்பெட்டிகள் – [illegible] கள் வாங்கவும்/விற்கவும் ஏல விற்பனை நிலையம், கோப்பாய்.

## பயிர்ச்செய்கை உத்தியோகத்தருக்கு வழிகாட்டியாக இருந்த அதிகாரி 'சண்'.

கடந்த 27 வருடங்களாக கொழும்பு, வவுனியா மட்டக்களப்பு யாழ்ப்பாணம் முதலான இடங்களில் பல்வேறு உதவி ஆணையாளர்களுக்கும் உறுதுணையாக இருந்து சேவையாற்றி விவசாயப் பெருமக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் திரு. சண்முகநாதன். கடந்த ஏழாண்டுகாலமாக பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாகிய எமக்கு வழிகாட்டியாக இருந்து எம்மை நல்ல முறையில் வழிநடத்தினார்

இவ்வாறு, யாழ்ப்பாண மாவட்டக் கமநல சேவைத் திணைக்களத்தில் கடந்த பத்து வருடங்களாக பிரதமலிகிதராகவும் பின்னர் நிர்வாக உதவியாளராகவும் கடமையாற்றி இளைப்பாறிய திரு. ஏ. சண்முகநாதன் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய மானிப்பாய் தொகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. சு. சிவகுமாரன் குறிப்பிட்டார்.

மானிப்பாய் தொகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவம் கடந்த மாதம் 29ம் திகதி உடுவில் கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது திரு. சண்முகநாதன் தனது நன்றியுரையில் கடமைகள் வழங்கப்பட்டால் அவற்றை ஏனென்று வினவாமல் சரிவரச் செய்து முடிப்பதே தமது தாரக மந்திரம் என்றும் நேர்மையையே பேணியதால் இத்தனை வருட சேவையிலும் ஒரு ஒழுங்காற்று நடவடிக்கையும் தம்மீது எடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

## தபசு காலம் ஆரம்பம்

(மிருவில்)

கடந்த புதன்கிழமை விபூதிப் புதன் அனுஷ்டிக்கப்பட்டதிலிருந்து கத்தோலிக்க மக்கள் தபசு காலத்தை ஆரம்பித்துள்ளனர் நாற்பது நாட்களுக்கு நீடிக்கும் இக்காலம் ஈஸ்டர் ஞாயிறு அனுஷ்டானங்களுடன் முடிவுபெறும்.

இத்தபசு காலத்தில் ஒறுத்தல்கள், பிறர் சிநேக முயற்சிகள், திருச்சிலுவைப்பாதை போன்ற நற்செயல்களில் விசேடவிதமாக கத்தோலிக்க மக்கள் ஈடுபடுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பனம் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த வாய்ப்பு

(சுண்டுக்குளி)

பனம் பொருள உற்பத்தியாளர்களையும், பிரதேசப் பொருட்கள் உற்பத்தியாளர்களையும் ஊக்குவிக்கும் முகமாக இலங்கைப் பனை அபிவிருத்திச் சபை பனம்பொருள் உற்பத்திகளையும், பிரதேச உற்பத்திப் பொருட்களையும் கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது. இதன் மூலம் உற்பத்திய ளர்கள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப் படுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையங்களில் இவ்உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுமென்றும், பனம் பொருள் உற்பத்தியாளர்களும், பிரதேசப் பொருள் உற்பத்தியாளர்களும் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மாணவருக்கும் அரசியலாளருக்கும் சுந்தரின் வாழ்க்கை சிறந்த பாடமாகும்

(உடுப்பிட்டி)

'தலைவர் திரு. ஸி சுந்தரலிங்கத்தின் வாழ்க்கை தமிழ் மாணவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும சிறந்தொரு பாடமாகும்.'

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர்களால்வித்தியாலயபிரார்த்தனை அரங்கில் காலஞ்சென்ற தலைவர். திரு. ஸி சுந்தரலிங்கத்துக்கு அளிக்கப்பட்ட இரங்கல் வைபவத்தில் உரையாற்றிய கவிஞர் ஆசிரியர் திரு. கே சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

திரு கே. நடராஜா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவ ஆரம்பத்தில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

திரு. சிதம்பரப்பிள்ளை மேலும் பேசுகையில், கூறியதாவது, திரு சுந்தரலிங்கம் தீர்க்கதரிசனம் மிக்க ஒரு தலைவனுவார். தனது சுயசுகபோக வாழ்வைப்பற்றி எவ்வித அக்கறையுமின்றி தம் இனத்தின் எதிர்காலம் பற்றித் திட்டவட்டமான கருத்தை அன்றே துணிந்து சொன்னவர் அவர், இதனுல் அவர் தமது மக்களால் தூக்கி எறியப்பட்டபோதிலும் தமது கருத்தில் உறுதி குன்ருத அசையா நம்பிக்கையை வைத்திருந்தார். தாம் சார்ந்த இனத்திற்கு இன்னல் நேர்ந்தபோது அவர் ஓடி ஒளியவில்லை. தமது அமைச்சர் பதவியையே துறந்து தமிழனின் தன்மானத்தைச் சரித்திரத்தில் இடம்பெறச் செய்தார்.

தீண்டாமை விடயத்தில் சிறுபான்மை மக்கள் இரத்தக்களரி மூலம், அடிதடிமூலம் இறைவன் வாழும் இல்லத்துள் புகுவதை அவர் விரும்பவில்லை.

அவர் ஒரு சிறந்த ஆசான் என்பதற்கு அவரின் மாணவர்களான மாணிக்க இடைக்காடர் எலியேசர் போன்ருேர் உதாரணபுருஷர்களாகத் திகழ்கின்றனர். இவ்வாறு அவர் கூறினுர்.

# கிராம எழுச்சி இயக்கத்தின் மாணவர்க்கான போட்டி

(அச்சுவேலி)

அகில இலங்கை மட்டத்தில் பாடசாலைகள் இடையே கிராம எழுச்சி இயக்கத்தின் ஏழாவது கொண்டாட்டத்தை முன்னிட்டு சித்திரம் கட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் தொடர்பான சுற்று நிருபம் கல்வி அமைச்சின் செயலாளர் திரு ஈ. எல விஜேமானவினைல் சகல பாடசாலை அதிபர்களிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

10ம் ஆண்டிலும் அதற்கு மேற்பட்ட ஆண்டிலும் கல்வி கற்கும் மாணவர் இடையே ''வீடற்றவர்களுக்கு இருப்பிட வசதியளிக்கும் ஆண்டின் முக்கியத்துவம் - 1987'' என்ற விடயம் தமிழ் மொழியில் நடைபெறும் போட்டிக்கு தனித்தனியே 1000 ரூபா 750 ரூபா 500 ரூபா பரிசாக வழங்கப்படும்.

அகில இலங்கைச் சித்திரப் போட்டியில் ''கிராமோதயம்'' என்ற பொருள் தொடர்பாக 10 ஆண்டிலும் 17 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு போட்டி நடைபெறும் 2000 ரூபா, 1500ரூபா' 1000 ரூபா மூன்று பரிசு வழங்கப்படும்.

# வடபகுதி விளைபொருட்கள் சந்தையில் சரியான மலிவு

(அச்சுவேலி)

வடபகுதி விளைபொருட்களின் விலைகள் மிகமிகக்குறைவடைந்து செல்கின்றது. இதனுல் விவசாயிகள் உற்பத்திச் செலவைத்தானும் பெற்றுக் கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் தற்பொழுது உருளைக்கிழங்கு அறுவடை பெருமளவில் நடைபெறுவதால் கிலோ 5 ரூபா தொடக்கம் 7 ரூபா வரை விற்கப்படுகின்றது. அந்தர் விளைச்சலும் கடந்த காலங்களைப் போல இல்லாமல் போய் விட்டது. விதைகிழங்கு 875 ரூபா விலைக்கு பெற்று உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் குறைந்தளவு விதை கிழங்கிற்கு முதலீடு செய்த பணத்தைக் கூட மீளப்பெற முடியவில்லை புகையிலை விலையும் குறைந்துள்ளது.

வெங்காயம் கிலோ 4 ரூபா தொடக்கம் 7 ரூபா வரையும் வாழைப்பழம் 2 ரூபா தொடக்கம் 3 ரூபா வரையும் கிலோ விற்கப்படுகின்றது.

முட்டை தொடக்கம் சகல மரக்கறி வகையும் பழவகையும் இம்முறை வடபகுதி பாவனையாளர்களுக்கு தட்டுப்பாடின்றி குறைந்த விலைக்கு கிடைக்கின்றன.

# இன்றைய கட்டத்தில் சமாதான சபைகள் மிகவும் அவசியமானவை

(உடுப்பிட்டி)

இன்றைய காலகட்டத்தில் சமாதான சபைகள் எமது மக்களுக்கு மிக அவசியமானதாக உள்ளன. மக்கள் இவற்றை மதித்து இவற்றின் தீர்ப்பை ஏற்று சமுதாயத்தில் அமைதியும் சமாதானமும் நிலவ, தமது ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு சரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ ஐயாத்துரை இவ் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள சகல கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி அமைக்கப்பட்ட 'சமாசான நல் இணக்க சபை' அங்குரார்ப்பண வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இச்சபைகள் மூலம் பொது மக்களுக்கு உரியகாலத்தில் உரிய நீதியை வழங்க முடியும் எனவும் இதற்கு தமதும் தமது பகுதியைச் சேர்ந்த அனைத்து கிராம சேவகர்களதும் ஒத்துழைப்பு என்றும் உண்டு எனவும் தெரிவித்தார்

இந்த இணக்கச் சபையின் தலைவராக திரு எம். சின்னையாவும் மற்றும் 14 பேர் அடங்கிய விசாரணைக் குழுவும் அமைக்கப்பட்டது.

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் இது தனது விசாரணைகளை நடத்திவருகிறது.

# கார் கடத்தல்

(மிருசுவில்)

யாழ். வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம். மாணிக்கத்தின் உத்தியோகபூர்வ கார் கடத்திச்செல்லப்பட்டது. உசனிலுள்ள அவரின் இல்லத்தினுள் ஆயுதபாணிகளாக நுழைந்த இளைஞர்களாலேயே இக்கார் கடத்திச் செல்லப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சுவரொட்டி எச்சரிக்கை

(சரசாலை)

சாவகச்சேரியின் சில பகுதிகளில் கசிப்பு உற்பத்தியாளர்களையும், விற்பனையாளர்களையும் எச்சரிக்கை செய்யும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இச்சுவரொட்டிகளின் கீழ் விடுதலை போராளிகள் என குறிப்பிடப்பட்டிருந்தது.

# ஏழாலை கூட்டத்தில் வலியுறுத்து

# மாணவர்சிந்தனை செயலுருப் பெறவிஞ்ஞானகல்விதேவை

(ஏழாலை)

மாணவர்கள் சிந்திப்பதனைச் செயலாக்கிக் காட்டுதற்கு இங்கு அமையும் விஞ்ஞான விவசாய நுண்கலை மன்றம் பெருவாய்ப்பளிக்கும். விஞ்ஞான, கணிதக்கல்வி, மருத்துவம், விவசாயம் ஆகிய துறைகளும் பலவாறு பயன்படுகிறது. களைகொல்லிகள், பீடைகொல்லிகள் முதலானவை உணவுற்பத்தியைப் பெருக்குதற்கு உதவுகின்றன. சனத்தொகைப் பெருக்கத்திற்கேற்ப உணவு, சுகாதார வசதிகளை ஈட்டிக்கொடுப்பதில்விஞ்ஞான கணிதக்கல்வியளிக்கும் பங்கு மகத்தானது.''

இவ்வாறு ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்தில் விஞ்ஞான, கணித விவசாய நுண்கலைச்சங்க அங்குரார்ப் பணக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய விஞ்ஞான ஆசிரியை திருமதி க. இராஜேந்திரம் குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில், ''உடலும், உள்ளமும் பலம் பெற விஞ்ஞான கணிதபாடங்களுடன் நுண்கலைகளாகிய இசை, நடனம், சித்திரம் என்பனவும் உதவுகின்றன எமது வித்தியாலயம் மாணவர்களுக்கு இத்துறைகளில தேர்ச்சியளிப்பதில் மிகுந்த சிரத்தையெடுத்து வருதலை மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்'' என்ருர்.

கணித ஆசிரியர் திரு நா. செல்வரத்தினம் பேசுகையில்' ''பரீட்சைகளில்சித்தியடையும் நோக்குடன் மட்டுமல்லாது, சமுதாயத்தில் முன்னணிவகிப்பதற்கும், தமிழ்மக்களுக்குள்ள இயல்பான திறமையைவெளிக்காட்டும் வகையிலும் மாணவர்கள் இச் சங்கத்தைப் பயன்படுத்த வேண்டும்'' என்ருர்.

கூட்டத்தில் வித்தியாலய அதிபர் திரு. வீ.த. திருநாவுக்கரசு, செல்வி கு. வசந்தராணி உட்பட மற்றும் பலரும் பேசினர்.

# யூனியன் கல்லூரி அகதிகளுக்கு உதவியது

(ஏழாலை)

12 மூடைகள் அரிசி, பால்மா இவற்றைத் தெல்லிப்பழை யூனியன்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சேகரித்து மயிலிட்டிப் பிரஜைகள் குழுவின் மூலம், மயிலிட்டியில் மீன்பிடித்தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உபகரித்துள்ளனர். இவ்வுணவு வகை ஒவ்வொரு குடும்பத்தினர்க்கும் மூன்று நாட்களுக்குப் போதுமானதெனத் தெரியவருகிறது.

மயிலிட்டிப் பிரஜைகள் குழுவின் செயலாளர் திரு. வி. இரத்தினராசா இவ்வுபகரிப்புக்காக யூனியன்கல்லூரி அதிபர், ஆசிரியர்களை மாணவர்களைப் பாராட்டியுள்ளதுடன் ஏனைய சமூக நலத்தாபனங்களும் இவ்வாறு உதவ முன்வருவது விரும்பத்தக்கது எனத் தெரிவித்துள்ளார்.

# ஏமாற்றம்

(மிருசுவில்)

தலைமன்னர்-இராமேஸ்வரம் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டதை அடுத்து தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் பல தமிழ் வார, மாத சஞ்சிகைகளை தற்போது இங்கு பெற முடியாத நிலை உருவாகியுள்ளது இதனுல் இச்சஞ்சிகைகளின் வாசகர்களும், சந்தாகாரர்களும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

# மன்னர் சம்பவம்: இவர்களும் கண்டனம்

(ஏழாலை)

மன்னர் மாவட்டத்தில், வட்டக்கண்டல் அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபரும் சக ஆசிரியர்கள் இருவரும் பாதுகாப்புப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு ஆட்சேபம் தெரிவித்தது சுன்னுகம், ஏழாலை, மல்லாகம் மற்றும் மானிப்பாய், காங்கேசன்துறைத் தொகுதிப் பாடசாலைகளனைத்தையும் சேர்ந்தமாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்து ஒரு மணி நேரம் கலோகங்களைக் கோஷித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பின்னர் பக்திக் கீதங்களை இசைத்தனர் மௌனஞ்சலி செய்தனர். பொது மக்கள் மாணவர்களது இந் நடவடிக்கைகளை மிக்க அனுதாபத்துடன், அவதானித்துக்கொண்டு நின்றனர். ஒரு மணி நேர ஆட்சேபம் முடியச்சகல மாணவர்களும் மிக அமைதியாகச் சென்று பாடங்களைத் தொடர்தனர்.

# நெடுந்தீவில் பரீட்சைக்கு 21 பேர் கொண்ட குழு

(புங்குடுதீவு)

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் ஒழுங்கு செய்யப்படுய இரு பரீட்சை மண்டபங்களிலும் க பொ. த. சாதாரணதரப் பரீட்சையினை இம்முறை சீராக நடத்துதற்கு 21 பேர் கொண்ட கண்காணிப்புக் குழு வொன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ம சிமியாம்பிள்ளை தலைமையில் அண்மையில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விசேட ஆலோசனைக் கூட்டமொன்றில் இக் கண் காணிப்புக் குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் கிராம சேவையாளர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் சமயப்பெரியார்கள், புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி ஆகியோருட்பட பலர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்டத்தில் உள்ள 172 பரீட்சை நிலையங்களில் நெடுந்தீவு பரீட்சை நிலையத்தில் மட்டுமே சகல பாடங்களும் திரும்பவும் நடைபெறவிருக்கின்றதென்றும், இம்முறை இப்பரீட்சை சீராக நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் திரு சிமியாம்பிள்ளை இக் கூட்டத்திற் வந்து கொண்டோரைக் கேட்டுக் கொண்டார்.

# முத்திரை கிடைக்காது மக்கள் அவதி

(சரசாலை)

சாவகச்சேரி தபால் நிலையத்தில் முத்திரை விற்பனை இடைநிறுத்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து முத்திரை சாவகச்சேரியில் வாங்குவது மிகக்கடினமாகிவிட்டது வெளிநாடுகளுக்குத் தபால் அனுப்புவோர் முத்திரைகளை வாங்குவதற்கு கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்கட்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை என்று மாறுமோ என மக்கள் அங்லாக்கிருர்கள்.

# அன்பளிப்பு

(நல்லூர்)

சுண்டுக்குளி பரி. யோவான் கல்லூரி இன்ரறக் கழகத்திலும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகத்தினுலும் அகதிகளுக்கென சேகரிக்கப்பட்ட உடைகள், உணவுப் பொருட்கள், நிதி ஆகியவைகள் யாழ் செஞ்சிலுவைச் சங்க நிர்வாகச்செயலாளரிடம் கையளித்துள்ளனர்.

இப்பொருட்கள் முல்லைத்தீவுப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக நிர்வாகச் செயலாளர் தெரிவித்தார்.

உதய சிந்தனை

தன்னாலே தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். தன்னைத் தாழ்த்திக் கொள்ளக் கூடாது நிச்சயமாகத் தானே தனக்கு உறவினன் தானே தனக்குப் பகைவன் —பகவத்கீதை.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

26-2-85 செவ்வாய்க்கிழமை (இரக்தாக்ஷி மாசி 15 )

# நோய்க்கான மருந்தை தீர்மானிப்பது யார்?

கொழும்பிலிருந்து வெளிவரும் 'ஐலன்ட்' ஆங்கிலத் தினசரி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் பக்கத்தில் பரபரப்பான செய்தியொன்றை வெளியிட்டிருந்தது.

"இலங்கை மீது படை எடுக்குமாறு அமிர்தலிங்கம் விடுத்த வேண்டுகோள் தொடர்பாக அட்டர்னி ஜெனரலின் ஆலோசனையை ஜனாதிபதி நாடியுள்ளார்" என்பதே இச்செய்தியின் மூன்று கலத்திலான தலைப்பு.

அமிர்தலிங்கம் மீது ஆறுவது அரசியலமைப்புத் திருத்தச் ஷரத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முடியுமா என்பதே இந்த ஆலோசனையின் நோக்கம் என்றும் அந்தச் செய்தி கூறுகின்றது.

அரசியலமைப்பின் ஆறுவது ஷரத்தினுல் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை திரு. அமிர்தலிங்கம் இழக்க வேண்டி வந்தது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

அந்த அதிர்ஷடத்தினுல் எதிர்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமரும் பாக்கியம் பெற்ற அனுரா பண்டாரநாயக்கா, அவசர வேக்காட்டில் அவசரப்பட்டு விடுத்த "கைது செய்" அறிக்கை தொடர்பாகவே "அமிரின் வேண்டுகோள்" (?) இன்று அட்டர்னி ஜெனரல் வரை சென்றுள்ளது.

அமிர்தலிங்கம் மீது வழக்குத்தாக்கல் செய்ய சட்டம் இடம் கொடுக்குமா ? இல்லையா ? என்பது வேறு விஷயம.

அமிர்தலிங்கம் அவ்வாறு பேசினுரா இல்லையா என்பதே முதலாவதாக நியாயப்படுத்த வேண்டிய விஷயமாகும்.

இதற்கு அமிர்தலிங்கம் என்ன சொல்லியிருக்கிறுர் ?

கடந்த சனிக்கிழமையே அமிர்தலிங்கம் விளக்கமான பதிலை அளித்துவிட்ட போதிலும, 'ஐலண்ட்' பத்திரிகை தனது ஞாயிறு இதழில் அதனை மூடி மறைத்துவிட்டது என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இலங்கை மீது இந்தியா இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும், யாரிடமும் தான் வேண்டுகோள் விடுக்கவில்லை என்று அமிர்தலிங்கம் அழுத்தம் திருத்தமாகப் பதிலளித்துவிட்டார்.

பங்களாதேஷ் நிலைமையுடன் இலங்கையின் இப்போதைய நிலையை ஒப்பிட்டதை அவர் மறுக்கவில்லை. இலங்கை மீது இந்தியா நேரடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கவில்லை என்றும் அவர் சொல்லவில்லை.

ஆனுல் நேரடி நடவடிக்கை எந்தவிதத்தில் அமைய வேண்டுமென்று இந்திய அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும் என்று தான் அமிர்தலிங்கம் சொல்லியிருந்தார்.

இவ்வாறு சொன்னுல் அது இராணுவ நடவடிக்கை என்று தான் பொருள்படுமோ?

பல மாதங்களுக்கு முன்னர் சென்னையில் வழக்கறிஞர்கள் சங்கக் கூட்டமொன்றில் அமிர்தலிங்கம் அளித்த நிதானமான பதிலொன்றும் இங்கு சிந்தனைக்குரியது.

"இராணுவ உதவி தேவை என்று நீங்கள் ஏன் இந்தியாவிடம் இன்னமும் கேட்கவில்லை" என்று சில வழக்கறிஞர்கள் அக் கூட்டத்தில் அமிர்தலிங்கத்திடம் கேட்டனர்.

"நாங்கள் நோயாளிகள். எமக்குள்ள நோயை மட்டும் தான் எம்மால் கூற முடியும். எமக்கு எந்த மருந்தை எப்போது தரவேண்டும் என்று வைத்தியர் தான் தீர்மானிக்க வேண்டும். நோயாளியே மருந்தையும் குறிப்பிட்டுக் கேட்க முடியுமா? " என்பதே அப்போது அமிர் வழங்கிய மதி நுட்பமான பதில்.

இன்றைய சந்தர்ப்பத்தில், மகா கனம் பொருந்திய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு அனுரா பண்டாரநாயக்கா அவர்களின் ஆழ்ந்த கவனத்துக்கு அமிர்தலிங்கத்தின் ஆழமான இந்தப்பதிலைச் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

அமிர்தலிங்கம் இலங்கை மண்ணில் கால் வைத்ததும் அவரைக் கைது செய்யுங்கள் என்று அனுரா விடுத்த வேண்டுகோளுக்கும் அவர் அருமையான பதிலளித்துள்ளார்.

ஏற்கனவே பல தடவை சிறை சென்ற நான் மீண்டும் செல்வதற்குப் பயப்படவில்லை என்று சொன்னதுடன் மட்டும் நிற்கவில்லை.

"தமிழர் கூட்டணி தனிநாட்டுக் கொள்கையை முன் வைத்து தேர்தலில் வெற்றி பெற்றது. எனவே அதன் அங்கத்தவர்களான எமக்கு அதனை வலியுறுத்திப் பேச உரிமையுண்டு.

அதனை ஆறவது ஷரத்து தடை செய்யுமானுல், முதலில் கூட்டணியை தடை செய்ய வேண்டும் " என்று அவர் தெரிவித்துள்ளார்.

சிலவேளை, இந்த விஷயமும் அட்டர்னி ஜெனரலின் பரிசிலனைக்குச் செல்லலாம்!

---

மனித உரிமைகள் நடைமுறை மீதான உலகளாவிய அறிக்கையொன்றை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. இதில் இலங்கைப் படுகொலைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இம்மாதம் 11ம் திகதியளவில் 'இந்து' வில் வெளியான இவ்வறிக்கையின் முக்கியபகுதி தமிழாக்கம்செய்து இங்கு தரப்படுகிறது.

# அமெரிக்க அறிக்கையில் தமிழர் மீதான தாக்குதல்

அமெரிக்க அரசாங்கத்தின் இராஜாங்கத் திணைக்களம், உலகளாவிய மனித உரிமைகள் நடைமுறைகள் மீதான தனது வருடாந்த அறிக்கையை அண்மையில் வெளியிட்டது. இலங்கை அரசாங்கத்தைக் கண்டிக்கும் வகையில் பின்வருமாறு இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைப்புச்சட்டத்தைப் பரவலாகப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் தனது நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பெருவாரியான தமிழ் இளைஞர்களைத் தடுப்புக் காவலில் வைத்திருக்கிறது. இச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆட்கள் இராணுவத்தினராலும் பொலிசாரினுலும் சித்திரவதை செய்யப்படுவது, அல்லது தாறுமாருக நடத்தப்படுவது பற்றிய தகவல் அறிக்கைகளையிட்டும் இவ்வருடாந்த அறிக்கை குறிப்பிடுகிறது இத்தகவல் அறிக்கைகள் மீண்டும் மீண்டும் கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

உலகளாவிய நூற்றறுபத்திரண்டு நாடுகளில் மனித உரிமைகளின் நிலை எப்படி இருக்கிறது என ஆராய்ந்து ஆண்டறிக்கைகளை வெளியிடுகிறது, அமெரிக்க மத்திய அரசின் இராஜாங்கத் திணைக்களம். 1984 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கை, காத்திரமான, ஆயரத்து நானூற்று ஐம்பத்துமூன்று பக்கங்கள் கொண்டது அமெரிக்க ஐக்கிய அரசு ள் ஏனைய நாடுகளுக்குப் பொருளாதார உதவி வழங்குவதுபற்றி தீர்மானிப்பது. அந்த அரசின் காங்கிரஸ் சபை. உத்திரமானங்கள்மீது செல்வாக்குப் பிரயோகிக்கும உத்தேசத்துடனேயே இவ்வாண்டறிக்கையானது மூதவை எனும் செனற் சபைக்கும், பாராளுமன்ற வெளிநாட்டலுவல்கள் கமிட்டிகளுக்கும் அனுப்பிவைக்கப்படவேண்டிய ஒரு பிரசுரமாகின்றது.

### தகவல் கொடுக்கும் துரோகிகள்

நீகன் நிருவாகம் ஆட்சி ஏறியதுமுதல் இவ்வறிக்கைகள், "மாவிலும் படாமல், மாங்காயிலும் படாமல்" குறித்த ஒரு நிலையைப் பேணிவந்துள்ளமை அவதானிக்கத் தக்கது சம்பந்தப்பட்ட இந்நாடுகளில் எல்லாம், அகக் கண்ணுக்குத் தென்படும் அமெரிக்க பாதுகாப்பு அக்கறைகள் ஒரு புறமும், அந்நாடுகளின் அரசாங்கங்களினுல் மீறப்படும் மனித உரிமைகள் மறுபுறமுமாக, அவை இரண்டுக்கும் நடுவே, கழைக் கூத்தாடிகளைப் போல அங்கும் சாயாமல் இங்கும் சாயாமல், ஒரு சமநிலை பேணிவந்துள்ளன இந்த ஆண்டறிக்கைகள். 1984 ஆம் வருடத்திற்கான இவ்வறிக்கை மேற்போந்த விதிக்கு விலக்கல்ல. ஆகையால், வெளிப்படையான. திட்டவட்டமான, தீர்ப்பு உச்சரிப்பதை இவ்வறிக்கை தவிர்த்து உள்ளமை வியப்பல்ல.

இலங்கையில் 1984 ஆம் ஆண்டு பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதானேரில், அவ்வருட முடிவில் விடுதலை செய்யப்படாது. இன்னமும் முந்நூற்று இருபத்தாறு பேர் தடுப்புக்காவலில் உள்ளனர். அவர்களோடு 1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் அவ்வாறே கைதாகிய நாற்பத்தாறு ஆட்களும் இதுவரை விடுதலையாக்கப்படாது இருக்கின்றனர். "1984, ஆகஸ்ட் மாதம், இலங்கையின் வடகடலோர, இரண்டு பட்டினங்ளில் அரச பாதுகாப்புப் படையினருக்கும் பிரிவினைவாதிகளுக்குமிடையே மோதல்கள் இடம்பெற்றன. அவற்றுக்குப் பின்பு, இராணுவம் அவ்விடத்துப் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுதல் விடுத்தது. பதினெட்டுக்கும் இருபத்தைந்து வயதுக்கும் இடைப்பட்ட வயதினரான ஆண்பிள்ளைகளை, ஆளடையாளம் காணவும் பதிவு செய்துகொள்ளவும் இராணுவத்தினரிடம் முன்னிலைப் படுத்துமாறு வேண்டப்பட்டனர். அத்தருணம் ஐநூற்றுக்கும் அதிகமான இளைஞர் விசாரணையின் பொருட்டு இலங்கைத் தீவின் தெற்குக் கோடிக்குக் கொண்டு செல்லப் பட்டனர். அப்பிரதேச வாசிகளில் மிக அதிகமானேர் சிங்களவர்களே, இவ்விளைஞர்கள், தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்தானவர்களும் அல்லர்; குற்றத்தவறு இழைத்தோர் எனச் சந்தேகிக்கப் பட்டோருமல்லர்: அரசாங்கச் செயல்களைக் கண்டிப்போர், அரசின் மீது இவ்வாறு குற்றஞ் சுமத்துகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் வாலிபர்களின் மறைவு குறித்த புகார்களையிட்டுக் குறிப்பிடுகையில், இவ்வறிக்கையானது அவர்களிற் சிலர் "தந்திக் கம்ப மரணதண்டனை பெற்றுள்ளனர்" எனவும் வேறு சிலர் பிறநாடுகளுக்கு அஞ்சியோடியோர் எனவும் விளக்கம் அளித்துள்ளது. இவ்வாறு பிறநாடுகள் சென்றேர், பாதுகாப்புப் படையினருக்கு மட்டுமல்லாது பயங்கரவாதிகளுக்கும் பயந்தே, இந்தியா, தென்கிழக்குஆசியா, மேற்கு நாடுகள் ஆகிய தேசங்களுக்குப் பிரயாணமாகியுள்ளனர்கள் என அறிக்கை விபரித்துள்ளது, தந்திக் கம்பங்களோடு சேர்த்துக் கட்டப்பட்டுக் கொலையுண்டு இருந்தோர், தமிழர்களுக்கு எதிராக அரசாங்கத்திடம் தகவல் கொடுத்த துரோகிகளாவர் எனக் கூறப்பட்டது.

மனித இன வேறுபாடுகளின் விளைவாக முன்னரும் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், 1984ஆம் ஆண்டிலும் மீண்டும் பெரும் அளவில் தலை தூக்கின என்கிறது, 1984ஆம் ஆண்டறிக்கை:

### பழிதீர்க்கும் இராணுவத் தாக்குதல்கள்

1984ஆம் ஆண்டில் தமிழ்ப் புலிகளின் தாக்குதல்களால் இறந்தோரின் தொகை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது: அதே சமயம், ஆயுதப் படைகளின்மீது பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதல்களுக்குப் பதிலடியாக, இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள மக்களைப் பாதுகாப்புப் படையினர் கண்டபடி "சில வேளைகளில்" தாக்கினர். "அத்தகைய தாக்குதல்களுக்குப் பலியாகிய அனேகர் தமிழர்கள். ஆனுல் சில சிங்களவர்களும் தமிழர்களும்கூட கொலையுண்டனர்." எனக் கூறுகிறது அமெரிக்க ஆண்டறிக்கை.

1984 ஆகஸ்ட் 04ஆம் திகதி இலங்கைக் கடற்படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் வல்வெட்டித்துறையில் நிகழ்ந்த மோதல்பற்றி இந்த அறிக்கை குறிப்பிடுகிறது: 'பயங்கரவாதிகள்" வைத்து வெடிக்கச் செய்த நிலக்கண்ணி வெடித்த பின்னர், ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்திலுள்ள அச்சுவேலி என்னுமிடத்தில் அரசாங்கத் துருப்புகள் கட்டடங்களுக்குத் தீவைப்பதை வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் கண்ணுற்றனர் என அறிக்கை தெரிவிக்கிறது பருத்தித்துறையிலுள்ள ஹாட்லிக் கல்லூரி நூலகத்தை எரித்தமைக்குப் பொறுப்பாக இருந்தோர் பொலிசாரே என்பதற்கு நம்பகமானசான்றுகள் கிடைத்துள்ளன: இச்சம்பவத்தில் பொலிசாரின் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதல்லவாயினும் நூலகத்தை மீள அமைத்துக் கொடுத்தற்கு அரசாங்கம் உடன்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளமை ஆண்டறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

1983ஆம் ஆண்டின்போது இலங்கை எங்கும் நிகழ்ந்தனவும், அதுமுதற்கொண்டுநிகழ்ந்தனவுமான இனக் கலவரங்களின்போது சம்பவித்த சட்டவிரோதச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் எனக் கூறப்பட்ட பாதுகாப்புப் படையினர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்கியுள்ளது எனக் கூறுகிறது. இவ்வாண்டறிக்கை. 1983, ஜூலை மாதத்தின்போது திருகோணமலையில் அனேக குடிமக்களைக் கொன்றதோடு நூறு குடிமனைகள், கடைகள் என்பவற்றைத் தீயிட்டு எரித்தமையிலும் யாழ்ப்பாணத்தில் ஐம்பத்தொரு பேரை கொன்றமையிலும்சம்பந்த பட்டிருந்த நூற்று நாற்பத்தொன்பது இராணுவத்தினர் கடற்படை படையினர் ஆகியோரை இலங்கை அரசாங்கம் "அபகீர்த்தியுடன் பதவி நீக்கம் செய்துள்ளது" என அறிக்கை அவதானித்துக் கொண்டது.

—5ம் பக்கம் பார்க்க


அமெரிக்க-ரஷ்ய முரண்பாட்டு நிலையின் எதிரொலியாக

# ஜெனிவா சந்திப்பு வேளையில் விண்வெளி ஆயுதபாவனை சர்ச்சையை ஏற்படுத்துமா?

ஜெனிவா

ஜெனிவாவில் மார்ச் மாதம் பன்னிரண்டாம் திகதி நடைபெறவுள்ள அணு ஆயுதப் பரிகரணம் தொடர்பான சோவியத் யூனியன், அமெரிக்காவுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளின் முக்கியத்துவம் இருநாடுகளினதும் தலைவர்கள் அடுத்தடுத்து வெளியிட்டுவரும் கருத்துக்களால் சர்வதேச கவனத்தை மேலும் அதிகரித்து வருகின்றது. இவ்வருட ஆரம்பத்தில் மேற்படி இருநாடுகளுக்கும் இடையில் நிகழ்ந்ததிலும் பார்க்க மார்ச் மாதச் சந்திப்பு அதிமுக்கியத்துவ விடையங்களை உள்ளடக்கியதாக இருக்கும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சந்திப்பின் போது அமெரிக்கா விண்வெளியில் ஆயுதப்பாவனையை அதிகரிப்பது என்ற உறுதியில் தொடர்ந்தும் இருக்கும் விடையம் சர்ச்சையை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகன் அணுஆயுதப் பாவனை உற்பத்தி என்பன கட்டுப்படுத்



திப்பட வேண்டும் என்ற ஜப்பானியப் பாராளுமன்றத்தின் தீர்மானத்திற்கு தனது பதிலைத் தெரிவித்துள்ளார். ஜெனிவா சந்திப்பின்போது முக்கிய விடையங்கள் சிக்கலானதாகவும், நீண்ட காலம் நீடிக்கக் கூடியதாகவும் இருக்கும் எனக்கருதுகிறேன்" என் திரு. றீகன் கூறியிருக்கிறார்.

"இப்பேச்சு வார்த்தைகளின் போது அமெரிக்கா விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொள்ளும். சோவியத் யூனியனும் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. அப்போதுதான் நிலைமையில் முன்னேற்றம் உருவாக 'முடியும்'" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் பாராளுமன்றக் கோரிக்கை தொடர்பாக சோவியத் யூனியன் பிரதம மந்திரி திரு. டிக்கினேவ் அளித்துள்ள பதில்" ஆயுதக்கட்டுப்பாடுவிடயத்தில் சோவியத் யூனியன் இயன்றளவு சாதகமாகவே செயற்படும்" என்று கூறியுள்ளார் அமெரிக்கா விண்வெளி ஆயுதபாவனையை அதிகரித்து வருவது சோவியத் யூனியனின் கண்டனத்துக்குள்ளாகி வருவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## பொலிசார் மீது வஞ்சம் தீர்க்கும் முயற்சி: ராஜஸ்தானில் கொலைகள் தீயிடல் தடியடி

(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தானில் சட்டசபைத் தேர்தல்வேளை சுயேச்சை வேட்பாளர் மான்ஸிங் உட்பட மூவர் துப்பாக்கிச் சூட்டால் மாண்ட சம்பவத்தைத் தொடர்ந்து அம்மாநிலத்தில் இரும் புதற்றநிலை உருவாகியுள்ளதாக ஜெய்ப்பூர் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த வன்முறைச்சம்பவத்தின் போது மூவர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர். உயர் பொலிஸ் அதிகாரிகள் தங்கியிருந்த பங்களா ஒன்றைச் சூழ்ந்து கொண்டு வன்முறையாளர் கூட்டம் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியதாம். இச்சம்பவத்தில் பொலிஸ் உயரதிகாரி ஒருவரும் காயமடைந்தார். டிரக் உட்பட சில வாகனங்கள் கொளுத்தப்பட்டன.

பொலிஸ் நிலையம் ஒன்று தாக்கப்பட்டதுடன் ஜீப் ஒன்றும் தீக்கிரையானதாகவும் அறிவிக்கப்படுகிறது. பொலிசார் கலகத்தை அடக்கத் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதேவேளை பொலிசார் துப்பாக்கியால் சுட்டபோது மாண்ட மான்ஸிங் உட்பட மூவரின் மரணங்கள் தொடர்பாக நீதிவிசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என மாநில முதலமைச்சர் திரு. தேவ்புரா உறுதியளித்துள்ளார்.

அமெரிக்க....

4ம் பக்கத் தொடர்ச்சி

1983 ஜூலை இனக்கலவரங்களில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருந்தனர் எனக்கூறப்பட்ட முறைப்பாடுகள் எல்லாவற்றையும் அரசாங்கம் தான் நுண்ணாய்வு செய்துள்ளது எனக் கூறுகிறது ஆயினும், குற்றச்சாட்டுகளை நிலைநாட்டுதற்குப் போதுமான சாட்சியம் இருக்கவில்லை. எவ்வாறு யினும், இராணுவமானது தனது சொந்த ஒழுக்காற்று ஒழுங்கு விதிகளின்கீழ் நடவடிக்கை மேற்கொண்டு இதுவரை அறுபத்தைந்து இராணுவத்தினரைப் பதவிநீக்கஞ் செய்துள்ளமையும் இதன் கண் காணப்பட்டுள்ளது இலங்கை அரசாங்கம் கூறும் இவை ஒரு புறம் இருக்க அரசாங்கத்தைக் கண்டித்து விமர்சிப்போர் கட்சியைக் கேட்போம். இது தொடர்பில், சில பொலிசார் இராணுவத்தினர் ஆகியோருக்கு எதிராக சட்டப்படி குற்றச்சாட்டுகள் கொண்டு வருவதற்கு வேண்டிய சாட்சியம் தாராளமாக உண்டு. இருந்தாலும், அவர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கையாக வழக்குத் தொடரத் தவறியுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி பேட்டி

## தேர்தலின் பின்பு ராணுவ சட்டமே தொடர்ந்து அமுல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நேற்று அரசியல் கட்சிகள் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்பட்ட நிலையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாடு முழுவதும் இராணுவம் எந்நிலைமையும் சமாளிக்க தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகவும் சிந்து மாகாணத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் முழு அளவில் பலப்படுத்தப் பட்டிருந்ததாகவும் அறிக்கைகள் தெரிவித்தன.

ஊர்வலங்களுக்கும் தடை விதிக்கப் பட்டிருந்ததால் பிரசாரமும் மந்தகதியில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. 1979ம் ஆண்டில் மாஜி ஜனாதிபதி சுல்பிகார் அலிபூட்டோ பதவி விலக்கப்பட்ட எட்டாண்டுகளின் பின் நடைபெறும் தேர்தலாகும் இது.

இத்தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு லண்டனில் உள்ள பூட்டோவின் மகள் பெனாஸிர் கோரிக்கை விடுத்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்க, தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி ஜெனரால் ஷியாவுல் ஹக் பிரிட்டிஷ் நாளேடு ஒன்றிக்கு அளித்த பேட்டியில், தேர்தலுக்குப் பின்னரும் இராணுவச் சட்டம் நீடிக்கும், சிவில் நிர்வாகம் சாத்தியமற்ற ஒன்று எனத் தெரிவிததுள்ளார்.

### ஞாயிறன்று 273 அகதிகள்

(ராமேஸ்வரம்)

கடந்த ஞாயிறுக்கிழமை இலங்கையிலிருந்து 78 குடும்பங்களைச் சேர்ந்த 273 அகதிகள் 14 படகுகளில் வந்து சேர்ந்தனர் என நேற்று அறிவிக்கப்பட்டது.

### 8700 அகதிகள்

(ராமேஸ்வரம்)

இம்மாதம் ஐந்தாம் திகதி முதல் ஞாயிறுவரை பாரதம் வந்த இலங்கை அகதிகளின் எண்ணிக்கை 2140 குடும்பங்களைச் சேர்ந்த 8700க்கும் கூடுதலான பேர் என நேற்று வெளியிடப்பட்ட புள்ளி விபரத் தகவல் ஒன்று தெரிவித்தது.

'அமிர்' கூறியதாக அறிவிப்பு

## காடுகளில் ஒளிந்திருக்கும் பலரும் அகதியாக வருவர்

(சென்னை)

காடுகளில் ஒளிந்துள்ள தமிழர்கள் பலரும் இன்னும் சில நாட்களில் அகதிகளாக தமிழகம் வந்து சேர்வர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறியதாக சென்னை வானொலி நேற்றுக் காலை தனது செய்தியறிக்கையில் தெரிவித்தது.

தற்போது நாளாந்தம் ஐநூறு அகதிகள் இலங்கையிலிருந்து வருவதாக அவர் தெரிவித்ததாகவும் இவ்வானொலி கூறியது.

மரகதம் சந்திரசேகர் சொல்கிறார்

## ராஜீவிடம் அகதிகள் நிலை தெரிவிப்பு அறிக்கையும் சமர்ப்பணமாகும்

(ராமேஸ்வரம்)

இலங்கையில் இருந்து ராமேஸ்வரம், மண்டபம் பகுதிகளுக்கு வந்துள்ள தமிழ் அகதிகள் பிரச்சினை குறித்துத் தான் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்திக்கு எடுத்துரைத்துள்ளதாக மேற்படி முகாம்களை தமிழக மந்திரி திருமதி கோமதி சீனிவாசனுடன் சென்று பார்வையிட்ட மத்திய மகளிர், சமூகநலத்துறை இணையமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்த அகதிகள் நிலைகுறித்து மத்திய அரசுக்கு தான் அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



மாநில அரசும் தான்மாநில அரசுக்கென சமர்ப்பிக்கும் மற்றோர் அறிக்கையையும் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சுகாதார மந்திரி தகவல்

## அகதிகள் பராமரிப்புக்கு டாக்டர் தாதி சிப்பந்திகள்

(ராமநாதபுரம்)

"இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்கென இரு அம்புலன்ஸுகளுடன் டாக்டர்கள் தாதிகள் சிப்பந்திகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் வைத்திய தேவைகள் உடனடியாக இந்தவகையில் கவனிக்கப்படுகின்றன" என்று தமிழக சுகாதார அமைச்சர் டாக்டர் எச் வி ஹண்டே ராமேஸ்வரம் மண்டபம் முகாம்களில் அகதிகளைப் பார்வையிட்டபின் ராமநாதபுரத்தில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்

ஜோர்தான் - பாலஸ்தீன விடுதலை இயக்க

## கூட்டுக் கோரிக்கை ஏற்க இஸ்ரேல் அரசினர் மறுப்பு

(அம்மான்)

மேற்காசிய அமைதித் தீர்வுக்காக ஜோர்தானும், பாலஸ்தீனிய விடுதலை இயக்கமும் கூட்டாக விடுத்த கோரிக்கைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இஸ்ரேல் அரசு மறுத்து விட்டது.

சுதந்திர பாலஸ்தீனிய ராஜ்யம், ரஷ்யப் பிரதிநிதி கலந்து கொள்ளும் மாநாடு கூட்டல் முதலானவை இக்கூட்டுக் கோரிக்கையில் அடங்கியிருந்தன.

இஸ்ரேல் இதனைப் புறக்கணித்துள்ளது சமாதான நிலையில் மேலும் தேக்கத்தை உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ராஜீவ்காந்தி பேச்சு

## வன்முறை களைந்தால்தான் பஞ்சாப் நிலைமை சீராகும்

(மகாராஷ்டிரம்)

"சீக்கியர், பஞ்சாப் பிரச்சினை சுமுகமாகத் தீர்வதற்கு தீவிரவாதிகளையும் வன்முறையாளர்களையும் கண்டிக்க வேண்டும்" என்று பிரதமர் திரு. ராஜீவ்காந்தி மகாராஷ்டிரத்தில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

"பஞ்சாப் பிரச்சினை தீர்வு அரசியல் சாசனத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்" என்று மீண்டும் வற்புறுத்தினார் பிரதம மந்திரி.

தீவிரவாதிகளை பி ஜே பியும் ஜனதாக் கட்சியும் ஊக்குவிக்கின்றன என்று குற்றஞ் சாட்டினார் அவர்.

"மாநிலங்களுக்கு மத்திய அரசு போதுமான நிதியைக் கொடுக்கத்தான் செய்கிறது. ஆனால் சில மாநிலங்கள் அந் நிதியைத் தம் கட்சி நலனுக்காகப் பயன்படுத்திவிடுகின்றன" என்றும் பிரதமமந்திரி சொன்னார்.

ஈழமுரசு

## ஆசிரியர் மோகனதாஸ் ஆனைப்பந்தியில் சுட்டுக்கொலை

ஆனைப்பந்திச் சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் கந்தர்மடம் அம்மன் வீதியைச் சேர்ந்த நடராஜா மோகனதாஸ் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நேற்று மரண விசாரணை நடைபெற்ற பின்னர் இவரது சடலம் பெற்றோரிடம் வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் மாலை வாகனமொன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட பாடசாலை ஆசிரியரான மோகனதாஸ் வழியில் இறக்கி விடப்பட்டதாகவும், பின்னர் சூட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு இறந்ததாகவும் விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தின்

# 19 பரீட்சை நிலைய மாணவர்களுக்கு புதிய நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது

நாளை ஆரம்பமாகும் ஜீ. சி. ஈ பரீட்சையின் போது பத்தொன்பது பரீட்சை நிலையங்களில் முன்னர் தோற்றிய மாணவர்களை, புதிய பரீட்சை நிலையங்களுக்கு மாற்றுவது என்று கல்வித்திணைக்களத்தால தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னைய நிலையங்களும், புதிய நிலையங்களின் பெயரும் கீழே தரப்படுகின்றது:

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகா வித்தியாலய மாணவர் புங்குடுதீவு மகா வித்தியாலயத்துக்கு (மண்டப இலக்கம 3)

காங்கேசன்துறை மகா வித்தியாலய மாணவர்கள நடேஸ்வராக கனிஷ்ட கல்லூரிக்கு.

யாழ். சென். ஜேம்ஸ் றோ. க. த. பெண்கள் பாடசாலை மாணவர்கள், திருக்குடும்ப கன்னியா மட ஆங்கில பாடசாலைக்கு (மண்டப இலக்கம்-2)

யாழ். சென். பேரீஸ் றோ. க. த. க பாடசாலை மாணவர்கள், வேம்படி மகளிர் பாடசாலைக்கு (மண்டப இலக்கம்-2)

யாழ். சென. சாள்ஸ் மகா வித்தியாலய மாணவர்கள், சுண்டுக்குளி மகளிர் பாடசாலைக்கு (மண்டப இலக்கம் 2)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய மண்டபம் 1ம், 2ம் மாணவர்கள் முறையே பெரியபுலம் மகா வித்தியாலத்தின் மண்டபம் 1ம், 2ம் இலக்கங்களுக்கு

கோண்டாவில் சைவ மகா வித்தியாலய மாணவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கனிஷ்ட பிரிவுக்கு

கோப்பாய் மகா வித்தியாலய மாணவர்கள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபம் 2ம் இலக்கத்துக்கு

சிதம்பராக் கல்லூரி மண்டபம் 1ம் 2ம் மாணவர்கள் முறையே உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி (மண்டபம்-3) உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு (மண்டபம்-3)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபம 1ம் 2ம் மாணவர்கள், முறையே தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபம் 1ம் 2ம இலக்கங்களுக்கு.

மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் 1ம் 2ம் 3ம் 4ம் இலக்க மண்டப மாணவர்களுக்கு முறையே அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்துக்கு (மண்டப இலக்கங்கள் 1 2ம்), புலோலி மெ. மி. த. க பாடசாலை (மண்டப இலக்கம் 1ம், 2ம்)

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபம 2ன் மாணவர்களுக்கு, சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபம் (இலக்கம்-2)

கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய மாணவருக்கு, ட்றிபேர்க் கல்லூரி மண்டபம் (இலக்கம்-2)

## தமிழ்நாடு சட்டசபை நேற்றுக் கூடியது முதல்வர் எம். ஜி. ஆர். சமுகமளிக்கவில்லை

(சென்னை)

புதிதாக அமைக்கப்பட்ட எட்டாவது தமிழ்நாடு சட்டசபையின் முதற் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றபோது தற்காலிக சபாநாயகர் திரு. பா. உ. சண்முகம் உறுப்பினர்களுக்குப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமசந்திரன் சபைக்கு வராததால் அவை முன்னவரும், நிதியமைச்சருமான திரு. இரா. நெடுஞ்செழியன் முதலில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அதையடுத்து மற்றைய அமைச்சர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு உ. சுப்பிரமணியமும பதவிப் பிரமாணம எடுத்துக் கொண்டனர். பின்னர் ஏனைய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம எடுத்துக்கொண்டனர்.

உடல்நலம பாதிக்கப்பட்டிருக்கும திரு. எஸ். திருநாவுக்கரசு சபையில் சமுகமளிக்கவில்லை. புதிய சபாநாயகர், துணை சபாநாயகர் தெரிவுகள் புதன்கிழமை நடைபெறும் என்று தற்காலிக சபாநாயகர் அறிவித்தார்.

புதிய உறுப்பினர்களை வரவேற்றுப் பேசிய திரு. பா. உ. சண்முகம் முதலமைச்சர் திரு எம் ஜி இராமச்சந்திரன் உடல் தேறி முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

அவர் உடல் நலம்பெற எல்லா உதவிகளும் செய்த மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி, பிரதமா திரு. ராஜீவ் காந்தி, மருத்துவர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கும் திரு சண்முகம் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## சிங்கள கட்சிகள் தீவிரவாதிகளுக்கு ஆதரவு!

(கொழும்பு)

"சில சிங்கள அரசியல் கட்சிகள் வடபகுதி பயங்கரவாதிகளுக்கு ஆதரவு அளித்து வருவது அம்பலத்துக்கு வந்துள்ளது". என்று கலாச்சார அமைச்சர் ஈ. எல் பி. ஹுருள்ளே ஸ்ரீ பியரத்ன ராம விகாரையில் நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

இவ்வைபவத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் கலந்து கொண்டார்.

## பற்றைக்குள் ஒரு கார்

...மாதகல கடற்கரையிலுள்ள பற்றையொன்றுக்குள் 'வாகஸ் வகன்' காரொன்று கடந்த இரண்டு நாட்களாக அனாதரவாக விடப்பட்ட நிலையில காணப்படுகின்றது.

## முதலில் கொள்ளை பின் வீட்டுக்குத் தீ!

பேசாலையில் மூன்று தினங்களுக்கு முன்னா நடைபெற்ற அசம்பாவித சம்பவமொன்றின் போது மீனவர் ஒருவருக்குச் சொந்தமான ஆடம்பரமான வீட்டிலிருந்து பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட பின்னர், வீடு எரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரந்தனில் இரு லொறிகளில் கொள்ளை

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன களஞ்சிய அறை உடைக்கப்பட்டு பெருந்தொகையான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. நேற்று முன் தினம்இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரண்டு லொறிகள் நிரம்பிய பொருட்கள் அங்கிருந்துஇனந் தெரியாத நபர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

## பாடசாலைகள் மூடப்பட்டன

இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக மதுரையில் மாணவர்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால், மதுரையில உள்ள பாடசாலைகள் அனைத்தும் மார்ச் மூன்றும் திகதி வரை மூடப்பட்டுள்ளன:

## 21 நாளில் 9167 அகதிகள் தமிழகம் சென்றுள்ளனர்

(சென்னை)

இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள தமிழ் நாட்டிற்குச் செலவது பற்றியும், அவர்களுக்கு அங்கு வழங்கப்படுகின்ற நிவாரண உதவிகள் பற்றியும மேலும் பல செய்திகள் கிடைத்துள்ளன.

நேற்று மட்டும 94 போ அகதிகளாகப் போய்ச் சேர்ந்துள்ளார்கள. இவர்களுடன் சேர்த்து கடந்த சில வாரங்களில் இவ்வாறு அகதிகளாகப் போய்ச சேர்ந்துள்ளோரின் எண்ணிக்கை9,167 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஐந்து நாட்களில் போய்ச சேர்ந்த 1,054 பேர் திருச்சியில உள்ள முகாம்களில இருக்கின்றார்கள். இவர்களில பெரியவர்களுக்கு 110 ரூபாவும் சிறுவர்களுக்கு 85 ரூபாவும மாதாந்தம் வழங்கப்படுவதுடன் மானிய விலையில அரிசி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுளளது.

புதுக்கோட்டையில் உள்ள அம்மாப்பட்டனம, மேல்ஸ்தானம், கிருஷ்ணரிப் பட்டினம, ஆகிய இடங்களில் 478 அகதிகளுக்கு புகலிடம் வழங்கப்பட்டுள்ளது.

53 குடும்பங்கள் வட ஆற்காடு பேயைச் சேர்ந்துள்ளன. அங்குள்ள திருமண மண்டபம் ஒன்றில் இவர்கள தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

## சப் இன்ஸ்பெக்டர் மாற்றம் ரத்து

காலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் எஸ். முத்துத்தம்பியின் மாற்ற ரத்து செய்யப்பட்டுள்ளது. அவா தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலேயே கடமையாற்றுவார்.

## உரியவர் யார்?

புங்குடுதீவு கிழக்கை சேர்ந்த இராசையா பேரின்பநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை வயாவிளான் சி. பார்த்திபனால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழமுரசு" அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவா அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம.

## பரீட்சையை...

—1ம் பக்கத் தொடர்

தள்ளப்பட்டு விட்டதால் ஆற்றொணாத் துயர் அடைந்துள்ளனர்.

பலவித வேண்டுகோள்களை அடுத்து, மேற்படி பரீட்சையை மீண்டும் நடாத்துவதற்கு, பரீட்சைத் திணைக்களம முன்வந்துள்ளது. இந்த விசேட பரீட்சை நாளை தொடக்கம் மார்ச் 8ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், பழைய மாணவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும், பிரஜைகள் குழுக்களும், மற்றும் பொது ஸ்தாபனங்களும், உயர் வகுப்பு மாணவர்களும், எவ்வித குழப்பமுமின்றி முறையாக இப்பரீட்சை நடைபெறுவதற்குத் தங்கள் மேலான ஒத்துழைப்பை நல்க வேண்டுமென, யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களத்தின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன்.

## ஞானசசந்திரன்...

—1ம பக்கத் தொடர்

ரும் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்

திரு ஞானச்சந்திரனின் ஏக புதல்வா அரவிந்தன் தந்தையின சிதைக்குத் தீ மூட்டினார். சாவகச்சேரி கண்ணுடிப்பிட்டி மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றது.

இதற்கிடையே, இக்கொலை தொடர்பான உரிமைகோரும் சுவரொட்டிகளை "தமிழீழ விடுதலைப் புலிகள்" பரந்தன் பகுதியில் ஒட்டியிருந்ததாக எமது நிருபர் அறிவித்துள்ளார்.

## குருநகர் வங்கி ..

— 1ம் பக்கத் தொடர்

ண்டு தபால் நிலையங்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் தலைமைப் பீடத்திலிருந்து தலைக்கும் உத்தரவுகளைத் தொடர்ந்தே மீண்டும திறக்கும் விடயம் முடிவு செய்யப்படுமாம்.

## குறிப்பிட்ட...

1- ஆம் பக்கத் தொடர்

திக்கு வந்துள்ளது.

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியும் கடற்றொழில் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேராவும் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுளளது.

இதுபற்றி ஆராயும் கடற்தொழில அமைச்சின அதிகாரிகளை குழு பந்தோபஸ்து அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பித்தவுடன் புதிய அனுமதி நடைமுறைக்கு வரலாம் எனவும தெரிவிக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சினதும, பாதுகாப்புப் படைகளினதும் கண்காணிப்புடனேயே இவ்வாறு மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படுமெனவும் கூறப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு...

—1ஆ-ம் பக்கத் தொடர்

வங்கியின் உதவி மனேஜர் முதற்கட்ட விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டாராயினும் மீண்டும் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்,

பன்னிரண்டு லட்சம் ரூபாவுடன் சேர்த்துக் கொள்ளையடித்துச் செலலப்பட்ட வங்கிக் கவச வாகனம் பற்றிய தகவல் எதுவும் இன்னமும் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கொள்ளை தொடர்பான விசாரணையின் பொருட்டு கொழும்பிலிருந்து சில உயர் அதிகாரிகள் இங்கு வரக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## தபாலக கொள்ளை

செங்கலடி பெரிய புல்லுமலை தபால் நிலையத்திலிருந்து நேற்று மூன்று தபால் பைகளும் இரண்டாயிரம் ரூபா பணம், மற்றும் பெறுமதி மிக்க முத்திரைகள் பலவும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டது.

## வீதி திருத்தம்

(வேலணை)

ஊர்காவற்றுறைத் தொகுதி பெருந்தெருக்கள் திணைக்களத்திற்கு சொந்தமான பல பிரதான வீதிகள் யாவும் இளைஞர் இயக்கங்களினால் மிகவும் துறமையான முறையில் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 26-02-1985 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336;